1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் இவ்வளவு விளக்கமாகக் கூறிய பிறகும் மீண்டும் நம்முடைய ரமணி அவர்கள் இதிலே விளக்கம் கேட்கிறார்கள். நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் இப்போது திரும்பவும் சொல்கிறேன். இன்றைக்கு வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கின்றவர்களுக்கு ஏதோ கையெழுத்திடாத ஒரு கடிதம் கொடுக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதத்திலே என்ன வாசகம் இருக்கிறது என்று சொன்னாரோ, அதைத்தான் இந்த அரசு இந்த அவையிலே சொல்லியிருக்கிறது. பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடாமல் தரவேண்டும் என்பது அல்ல ; (குறுக்கீடு) — தெரியும் நான் பார்த்திருக்கிறேன் — தரவேண்டும் என்பது அல்ல. பத்திரிகை விளம்பரங்களில் கூட எது சொல்லப்பட்டதோ, அதைத்தான் இந்தக் கையெழுத்திடாத கடிதத்திலும் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன், அவர்கள் வைத்த பத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகளில் ஒன்றிரண்டைத் தவிர, எல்லாக் கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு, அந்த ஒன்றிரண்டிலே கூட மிச்சம் ஒரே ஒரு கோரிக்கை, டெபுடி தாசில்தார் பிர்க்கா அளவிலா, அல்லது ஜோனல் அளவிலா என்கிற இந்த ஒரே ஒரு பிரச்சினை, அதைப் பற்றி பிறகு அமர்ந்து பேசித் தீர்க்கலாம் அவர்கள் ஜோனல் அளவு போதும் என்ற அளவிற்குக் கூட வந்து இருக்கிறார்கள். அதைப் பற்றிப் பிறகு பேசித் தீர்க்கலாம், இன்றைக்கு வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுவிட்டதாக இன்று மாலையிலே செய்தி வருமானால் நாளைக்கு நானே அவர்களோடு அமர்ந்து பேசத் தயராக இருக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

ஆம்பூரில் 14—4—1990 ஆம் நாளன்று நடைபெற்ற வன்முறைகள் மற்றும் துப்பாக்கிச் சூடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். டி. உகம்சந்த், குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு, கே. ரமணி, கே. ஆர். சுந்தரம், உ. ரா. வரதராசன், மற்றும் எம். அப்துல் லத்தீப் ஆகியோர் “ 14—4—1990 அன்று ஆம்பூர் நகரில் நடந்த நிகழ்ச்சிகளாலும், அங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினாலும் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் ” என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற இந்தச் சூழ்நிலையில் 14 ஆம் தேதி ஆம்பூர் நகரத்தில் அவருடைய நூற்றாண்டு நினைவாக ஊர்வலம் எடுப்பதாக ஏற்கனவே காவல் துறைக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அறிவிப்பினைச் செய்து, அந்தப் பகுதியிலே ஊர்வலம் சென்று இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே, இதற்கு முன்பே 5, 6 மாதங்களுக்கு முன்பு, பாராளுமன்றத் தேர்தல் .... (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

வேலை நிறுத்தம் செய்யும் வருவாய்த்துறை அலுவலர்களோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது குறித்து—தொடர்ச்சி.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களைக் கூப்பிட்டு வைத்து அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என்று சொன்னது நல்ல அம்சம், அதை எல்லாம் நாங்கள் வரவேற்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் என்றால் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் நானும் சேர்ந்து தான்.

திரு. கே. ரமணி : வருவாய்த் துறை அமைச்சர் இல்லாமல் முதலமைச்சர் பேசுவார் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை. அதை அவர்கள் சொன்னதால்தான் நான் சொல்கிறேன். ஆனால் வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்ட பிறகுதான் இந்தப் பேச்சு வார்த்தை என்ற அந்த அணுகுமுறை, நடைமுறையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நீங்கள் வேறு எந்தவிதமான பிரச்சினைக்கும் இடமில்லாமல், இந்த பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும், நான் ஏற்கனவே சொல்லும்போது, தாண்ட முடியாத மலை இதற்கு மத்தியிலே இருப்பதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறேன். இப்போதும் அதுதான் நிலைமை. பிரச்சினை என்னவென்றால், வேலை நிறுத்தத்தை நிறுத்திவிடு, அதற்குப் பிறகுதான் பேசுவோம் என்ற முறை எடுப்பது என்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேச்சு வார்த்தையிலே முக்கால் பகுதி கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகு, எஞ்சியிருக்கிற ஒன்றிரண்டுபற்றிப் பிறகு பேசலாம், வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு வாருங்கள் என்று சொல்வதில் என்ன அநீதி இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.